DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - குழந்தகவுண்டர் **PW-2** | வயது |
| த/க பெயர் | தொழில் |
| கிராமம் | தாலூக்கா |
| மாவட்டம் | |

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் கள்ளாங்காட்டு தோட்டத்தில் வசித்து வருகிறேன். அது இளுப்பிளி கிராமத்தைச் சேர்ந்தது. மேற்படி கிராமம் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது. இவ்வழக்கின் புகார்தாரர் சுசீலாவை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். புகார்தாரரின் தாத்தா பெயர் சித்தாகவுண்டர். அவருக்கு இரண்டு மகன்கள். ஒருவர் பெயர் குருசாமி மற்றவர் பெயர் சின்னப்பன். சின்னப்பகவுண்டருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். மகள் பெயர் சுசீலா. மகன்களில் ஒருவர் பெயர் தங்கராஜ், மற்றொருவரின் பெயர் ஞாபகம் இல்லை.

2) குருசாமிக்கு 1974ம் வருடம் திருமணம் நடந்தது. குருசாமிக்கு அக்கரை புதுப்பட்டியைச் சேர்ந்த மாரியம்மாள் என்பவருடன் திருமணம் ஆனது. திருமணம் முடிந்த பிறகு மாப்பிள்ளை வீட்டிற்கு வந்தவர், எண்ணெய்த் தேய்ப்பிற்காகச் சென்றுவிட்டு பின்னர் வரவில்லை. நாங்கள் பலமுறை மாரியம்மாளைச் சென்று அழைத்தோம். அவர் வரவில்லை. குருசாமி, மேற்படி மாரியம்மாள் வருவார், வருவார் என்று பார்த்தார்.

ஆனால் அவர் வரவில்லை. குருசாமியின் அண்ணனுக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் இருந்தார்கள். குருசாமி அவரது அண்ணனிடம், உங்களுக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளார்களே, எனக்கு ஒரு வாரிசு கொடுங்கள் என்று கேட்டார். அப்போது புகார்தாரர் சுசீலாவிற்கு ஆறு வயது இருக்கும்போது ஆணைக்கவுண்டனூர் அக்கினி மாரியம்மாள் கோவிலில் வைத்து மேற்படி குருசாமி சுசீலாவைத் தத்து எடுத்துக் கொண்டார். மேற்படி கோவிலில் வைத்து சாட்டை பூசாரி மற்றும் நான்கு ஐந்து நபர்கள் சேர்ந்து எள்ளும் தண்ணீரும் தெளித்து தத்து எடுத்துக் கொண்டார்.

3) சுசீலாவை 5ம் வகுப்பு வரையில் குருவரெட்டியூரில் படிக்க வைத்தார். பின்னர் 10ம் வகுப்பு வரை குருவரெட்டியூரில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் படிக்க வைத்தார். குருசாமிக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தது. அதை குருசாமியும், புகார்தாரரும் இணைந்து ஓட்டிக் கொண்டிருந்தனர். புகார்தாரருக்கு பூலம்பட்டி மண்டபத்தில் வைத்து ராசு என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். குருசாமிக்கு சளிநோய் இருந்தது. அதற்கு மேட்டூர், பவானி ஆகிய ஊர்களில் இருந்த மருத்துவமனைகளுக்கு புகார்தாரர் கூட்டிப்போய் மருத்துவம் பார்த்தார். குருசாமி தை மாதம் காப்புக்கட்டு அன்று காலை 9 மணிக்கு அவரது வீட்டில் வைத்து இறந்துவிட்டார். அவரது சடலத்தை புகார்தாரர் சுசீலா அவரது தாத்தா பாட்டி ஆகியோர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே கொண்டு சென்று அன்றைய தினமே அடக்கம் செய்தார். அதன்பிறகு காட்டை சுசீலாதான் ஓட்டிக் கொண்டிருந்தார். அப்போது மாரியம்மாளும், அவரது மகனும் அந்த இடத்தை சிலருக்கு விற்றுவிட்டதாக அனைவரும் வந்தார்கள். சுசீலாவை மேற்படி நிலத்தை அனுபவம் செய்வதை தடுத்தார்கள். இது தொடர்பாக அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆனால் அதை யாரும் விசாரிக்கவில்லை. இன்று வரையில் நிலத்தை சுசீலாதான் ஓட்டி வருகிறார். அதன் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாக கேள்விப்பட்டேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>**